## ஆகஸ்ட் - 11

**"நீ மரண பரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தைத் தருவேன்."**

**- வெளி 2 : 10.**

இன்னும் கொஞ்சக் காலத்தில் சோதனைகள் முடிந்துவிடும். அந்த கொஞ்சக் காலம் கடந்து செல்லும் வரை, நாம் சோதனைக்காலத்தில் இருக்கிறோம். நாம் நாடுகிற அந்த மகிமையான கிருபைகளுக்காக நாம் தகுதியுள்ளவர்களாயிருக்கிறோமா அல்லது தகுதியற்றவர்களாக இருக்கிறோமா என்பதை இந்த சோதனைக்காலம் நிரூபிக்கும். நாம் அவைகளை உயர்வாக மதிக்கிறோமென்றால், அவைகளை கர்த்தருடைய செயல்முறைப்படி நாடித்தேடுவோமாக. கிறிஸ்துவின் புண்ணியத்தின் மூலமாக (நம்முடைய செயலின் அல்லது நியாயம் இவைகளின் தகுதியின் மூலமாக அல்லாமல்) கர்த்தர் அங்கீகரிக்கக் கூடிய நம்முடைய ஜீவியத்திலுள்ள மற்ற காரியங்களில் எவ்வளவு பாகத்தைக் கர்த்தருக்குக் கொடுக்கலாமென்று பார்ப்போமாக. கடந்து செல்லுகிற நாட்களும் மணிகளும் பிரதிஷ்டை செய்திருக்கிற விதமாக உபயோகித்துத் தீர்க்கப்படுவதாக. நம்முடைய நாழிகைகளும் நாட்களும் எவ்வளவு தூரம் சுயநலமான காரியங்களில் செலவழிக்கப்படுகின்றன என்றோ அல்லது தேவனுடைய வார்த்தையில் குறிப்பிட்டிருக்கிற கடமையின் நியாயமான தேவைகளுக்கப்பால் மற்றவர்கள் நிமித்தமாக வீணாக்கப்படுகிறதென்றே கவனிப்போமாக. எவ்வளவு தூரம் நாம் கர்த்தருக்குச் செய்திருக்கிற பொருத்தனைகளை நிறைவேற்றுகிறோம் என்று கவனிப்போமாக.

**- Z '05, 380(R 3685)**

ஒரு ஆளுக்கோ, விவகாரத்துக்கோ அல்லது தத்துவத்துக்கோ நம்மிடமுள்ள ஒரு முழுமனதுடன் கூடிய பக்தியே, உண்மையாயிருப்பதைக் குறிக்கிறது. இவைகள் எல்லாம் ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு உண்மையாயிருக்கிறான் என்பதைக் குறிப்பாக உணர்த்துகின்றன. இது அவருக்குப் பிரியமான காரியங்களில், ஆவியிலும் விதத்திலும், அவருக்காக நம்முடைய எல்லாவற்றையும் உபயோகிக்கத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட பக்தி ஒரு சுருக்கமான காலத்துக்காக அல்ல, அது மரணபரியந்தம் இருக்க வேண்டும். அதாவது அது மரணத்தை உண்டுபண்ண வேண்டும். மரணம் வரைக்கும் நீடித்திருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனின் கிரீடம் ஒரு பரிசாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. நித்திய ஜீவனை அவர்கள் அடைவதற்கு இடையில் சம்பவிக்கிற கஷ்டங்கள் உண்மையாகவே பிறகு அவர்களுக்கு சுலபமானவைகளாகத் தோன்றும். நித்திய காலமாக அவர்களுக்கு இருக்கப் போகிற பங்கு உண்மையாகவே பாக்கியமுள்ளதாக இருக்கும். **- P '32, 112.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**நீதி 28:20; மத் 10:22; 24:13; 25:14-23; லூக் 16:10-12; 1கொரி 4:2; எபி 3:14; ரோம 8:17,18; கலா 6:7-9; யாக் 1:12; 1பேது 1:4-8; 2பேது 1:4; 1யோவா 3:2,3; வெளி 3:21.**

**கோபுர வாசிப்பு : Z '15, 150 (R 5688)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் விசுவாசமுள்ளவனாய் இருந்தேனா? அல்லது இல்லையா? எதில்? இது நித்திய ஜீவனைப்பற்றிய எனது நம்பிக்கையில் எவ்வாறு கிரியை செய்தது?**